பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,

காரைக்கால் & இந்திய வானிலைத்துறை

புதுச்சேரி மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(01.06.2022 முதல் 05.06.2022 வரை)

தொ. எண் (அலுவலகம்): 04368 – 261182

E-mail: agronaas2012@gmail.com தொ. நகல் (அலுவலகம்): 04368-261260

அறிக்கை எண்: 043 (05) PJN/GKMS/2022 தேதி: 31.05.2022

## புதுச்சேரி மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்த வார வானிலை (27.05.2022 முதல் 30.05.2022 வரை) | | | | வானிலை காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு - 05.06.2022 – 8.30 மணி நேரம் வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 27/05 | 28/05 | 29/05 | 30/05 | | நாள்-1 01/06 | நாள்-2 02/06 | நாள்-3 03/06 | நாள்-4 04/06 | நாள்-5 05/06 |
| 45.2 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 38 | 37 | 37 | 37 | அதிகபட்ச வெப்பநிலை (டி.செ) | 38 | 38 | 39 | 39 | 39 |
| 22 | 26 | 27 | 26 | குறைந்தபட்ச வெப்பநிலை (டி.செ) | 27 | 28 | 28 | 28 | 28 |
| 5 | 5 | 5 | 3 | மேக மூட்டம் | 3 | 3 | 4 | 5 | 3 |
| 78-82 | 76-78 | 74 | 72 | ஈரப்பதம் (%) | 65-75 | 65-75 | 65-75 | 70-80 | 65-75 |
| 4 | 4 | 4 | 4 | காற்றின் வேகம் (கி.மீ) | 12 | 12 | 12 | 12 | 12 |
| தெற்கு தென் கிழக்கு | தென் கிழக்கு | தெற்கு தென் கிழக்கு | தெற்கு | காற்றின் திசை | தெற்கு தென் கிழக்கு | தெற்கு தென் மேற்கு | தெற்கு தென் மேற்கு | தெற்கு | தெற்கு |

### எதிர்பார்க்கப்படும் வானிலை (01.06.2022 முதல் 05.06.2022 வரை):

→ ஜூன் 01 மற்றும் 02 தேதிகளில் இடியுடன் மின்னல் ஓரிரு இடங்களில் இருப்பதற்கு வாய்ப்புள்ளது .

- அடுத்த ஐந்து நாட்களுக்கு வானம் ஓரளவுக்கு மேகமூட்டத்துடன் காணப்படும். வெப்ப நிலை 27-39 டி.செ, மாலை மற்றும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 65-80 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் மணிக்கு 12 கி.மீ அளவுக்கு பதிவாக வாய்ப்புள்ளது. காற்றானது பெரும்பாலும் தெற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

- ஜூன் 05 லிருந்து 11 வரை மழை (2.0 மி.மீ), அதிகபட்ச வெப்பநிலை (34.12 டி.செ) மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை (24.23 டி.செ) இயல்பாக இருப்பதற்கு வாய்ப்புள்ளது .

வேளாண் அறிவுறை

| பயிர்கள் / கால் நடைகள் | பருவம்/ விவரங்கள் | வேளாண் ஆலோசனைகள் |
|---|---|---|
| நெல் | தூர் கட்டும் பருவம் | நெற் பயிரில், குருத்துப் பூச்சிகளை கட்டுப்படுத்த, டிரைக்கோகிராமா ஜப்பானிக்கம் ஒட்டுண்ணிகளை ஹெக்டருக்கு 1,00,000 (நடவு நட்டபின் 37, 44 and 51 நாட்களில்) பயன்படுத்தலாம் அல்லது லிட்டருக்கு 4 மி.லி அசாடிராக்டின் (0.03 %) அல்லது கார்டேப்ஹைட்ரோகுளோரைடு (cartaphydrochloride 50% SP) லிட்டருக்கு 2 கிராம் அல்லது ஃப்ளுபென்டையமைடு (flubendiamide 20 WG) லிட்டருக்கு 0.25 கிராம் அல்லது தையமீதாக்சம் (thiamethoxam 25 WG) லிட்டருக்கு 0.2 கிராம் என்ற அளவில் தெளிக்கலாம். |
| தென்னை | காய்க்கும் பருவம் | தென்னையில் சுருள் வெள்ளை ஈக்களைக் கட்டுப்படுத்த தண்ணீரை நன்கு பீய்ச்சி அடித்தும் மற்றும் ஏக்கருக்கு 8 மஞ்சள் நிற ஒட்டும் பொறிகளையும் வைத்து கட்டுப்படுத்தவும். இதன் தாக்குதல் அதிகமாக இருப்பின் வேப்பஎண்ணெய் 0.5 %+ டிவீன் 80 (0.005%) பயன்படுத்தவும். |
| பாகல் மற்றும் புடலை | காய்க்கும் பருவம் | பாகல் மற்றும் புடலையில் பெண்பூக்களின் எண்ணிக்கைகளை அதிகரிக்க எத்ரல் கரைசலை 100 பிபிஎம் , பீர்க்கனில் 250 பிபிஎம் விதைத்த 15 வது நா ளிலிருந்து வாராந்திர இடைவெளியில் நான்கு முறை தெளிக்கவும் |

**குறுஞ்செய்தி: அடுத்த சில நாட்களுக்கு வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுவதால்பயிர்களுக்கு நீர்ப்பாசனம் அளிக்கவும்.**

**முதல்வர்**